(கு.வி.மு.ச.அத்தியாயம் XXIII)

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், இராதாபுரம்

| | |
|---|---|
| ஆண்டுப்பட்டிகை<br>பல்வகை<br>முதன்மைப் பதிவேடு<br>அமர்வு | CC.No.367/2022 |

அரசுதரப்புக்காக சாட்சியின் சான்றுரைகள் PW– 4

| | | |
|---|---|---|
| பெயர் | : | சாமுவேல் சகுந்தர் |
| த/பெ | : | கோவில்ராஜ் |
| கிராமம் | : | திசையன்விளை |
| வட்டம் | : | திசையன்விளை |
| சாதி | : | பி.சி |
| அழைத்தல் | : | வியாபாரம் |
| மதம் | : | கிறிஸ்தவர் |
| வயது | : | 42 |

( 1,2 எதிரிகள் ஆஜர்)

2023 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 27 ஆம் நாளன்று, 1969 ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–ன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கப்படுகிறது.

**முதல் விசாரணை** :–

1) நான் தற்போது திசையன்விளையில் வசித்து வருகிறேன். நான் தங்க ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன். அ,சா 1,2,3– ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும்.

2) அ.சா.1 வீடு வாங்கியது சம்பந்தமாக எதிரிகளுக்கும் அ.சா.1 க்கும் பிரச்சனை இருந்து வந்தது. கடந்த 19–08–2020–ம் அன்று அ.சா.1,2–யின்

வாகனத்தை எதிரிகள் எரித்ததாக கேள்விப்பட்டேன். 26–08–2020 அன்று மதியம் 03.45 மணிக்கு அ.சா 1,2 டீ கடைக்கு டீ குடிக்க சென்றேன். அப்போது எதிரிகள் அங்கு வந்து அ.சா, 1,2–ஐ தேவடியா மவளே, பைக்கை எரித்து மாதிரி உன்னையும் உன் குடும்பதையும் எரிக்காமல் விட மாட்டேன் என்று மிரட்டினார்கள். அப்போது அங்கு நின்று நானும் என் நண்பன் பாலமுருகன் (அ.சா.3) என்பவரும் எதிரிகளை சத்தம் போடவே எதிரி மீண்டும் எங்களையும் சேர்த்து அசிங்கமாக ஏசி மிரட்டி சென்றுவிட்டார்கள். வழக்கு சம்பந்தமாக அ.சா.1 காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** – இல்லை (எதிரிகள் ஆஜரில் இருந்தும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில் இருந்தும் குறுக்குவிசாரணைக்கு வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்குவிசாரணை செய்யப்படவில்லை).